# அறிவுலக மேதை!

[ பெரியார் கவியரங்க மலர் ]



தமிழரசுப் பதிப்பகம்

மூக்கனூர்பட்டி :: தகடூர் மாவட்டம்

விலை: 75 காசு

# அறிவுலக மேதை!

(பெரியார் கவியரங்க மலர்)

உலகத்தமிழ்க் கருத்தரங்கு ... சென்னை
235
... காட்சிக் குழு

தொகுப்பு:

## இரா. கண்ணிமை

○

தமிழரசுப் பதிப்பகம்
மூக்கனூர்பட்டி
அரூர் வட்டம் : : தகடூர் மாவட்டம்

முதற் பதிப்பு : சனவரி 1967

உரிமை : தொகுப்பாசிரியருக்கு

வெளியீடு : இரண்டு



# நான் வைத்துப் போகும் செல்வம்.

இளைஞர்களே !

**துணிவு கொள்ளுங்கள். சாகத்துணிவு கொள்ளுங்கள் உங்கள் சொந்தவாழ்வு நலத்தையும், மானத்தையும் விட்டுத் தொண்டாற்றத் துணிவு கொள்ளுங்கள்**

**இதுதான் இனி வெகுகாலம் வாழப் போகும் மக்களாகிய உங்களுக்கு சாகப் போகும் கிழவனாகிய நான் வைத்து விட்டுப்போகும் செல்வமாகும்.**

— பெரியார்.

பேராசிரியர்
**தி. வை. சொக்கப்பா**
எம்.ஏ., எல்.டி.,

"தமிழ்க் குடில்"
கான்வெண்ட் சாலை,
அழகாபுரம், சேலம்-4.

ஐயா,

வணக்கம். தங்களின் மடல் பெற்றேன் மகிழ்ச்சி, நன்றி காலந்தாழ்த்தி எழுதுதற்கு பொறுத்தருள்க.

தமிழர்களுக்கு ஏற்றமும் எழுச்சியும் அளிக்கவும், தன்மானமுள்ள மக்களாய் உரிமையுடன் அவர்கள் வாழவும், அல்லும் பகலும் அயராது, கண்ணும் கருத்துமாய்ப் பேசியும் எழுதியும் உழைத்து, ஆக்கச்செயல் புரிந்துவரும் செயற்கரிய பெரியார் அவர்களின் அரும்பணியைக் கவியினாலும் – காவியத்தாலும் பாராட்டுவது நம்முடைய தலையாய கடமை.

அவர்தம் சீரிய கருத்துக்களை இளைஞர்கள் உணர்ந்து பாடி மக்களிடையே பரவச்செய்ய கருத்துநிறைந்தகவிகள் அமைய தங்கள் கவியரங்கமும் தொகுப்பு மலரும் பெரிதும் துணைபுரியுமாகையால், தங்கள் முயற்சி பாராட்டற்குரியது.

தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி "அறிவுலக மேதை" என்னும் பொருள்பற்றி கவியரங்கு அமைத்து பெரியார் பிறந்தநாள் மலராக ஒரு கவிதைத் தொகுப்பு வெளியிட முன்வந்துள்ளது புதுமையும் புரட்சியுமானது. தங்கள் முயற்சி வெல்க!

22—11—65

தங்களன்பன்,
தி. வை. சொக்கப்பா.

திருவாரூர் கே. தங்கராசு
ஆசிரியர் "பகுத்தறிவு"

ராசா அண்ணாமலைபுரம்
சென்னை-28

அன்புடையீர்! வணக்கம்!

தாங்கள் வரும் தைத் திங்களில் "பெரியார் கவியரங்கம்" நடத்தி "அறிவுலக மேதை" எனும் தலைப்பில் கவிதை மலர் ஒன்று வெளியிட இருப்பதுகண்டு பெரிதும் மகிழ்கின்றேன்.

இளங் கவிஞர்களிடையில் எழும் இள ஞாயிறு போன்று கவிதையாத்து அறிவுலக மேதையாம் தந்தை பெரியார்தம் வழிநின்று தொண்டாற்றி வருவது சாலச் சிறப்புடையதாகும்.

தங்களது தொண்டும் பணியும் சிறக்க மனமார வாழ்த்துகின்றேன்.

30—12-65

தங்களன்புள்ள,
கே. தங்கராசு

## —: கலந்துக் கொண்ட கவிஞர்கள் :—

கவிஞர் இரா கண்ணிமை - முக்கனூர்பட்டி

,, கலி பூங்குன்றன் - மாயுரம்

,, தமிழப்பன் - அரூர்

,, அரங்க. இராசாராமன் - வளவனூர்

,, வ. சிவசங்கரன் - திருக்கழுக்குன்றம்

,, கருவை இராவண ஒன்னன் - கரூர்

,, தி. குலோத்துங்கன் - கரந்தை

,, சஞ்சீவி துரை - மொரப்பூர்

,, பகுத்தறிவன்

,, மணிவேலன் - அரூர்

,, தேவ. சீனி. அருணன் - நாகர்கோவில்

,, திருவெழிலன் - சென்னை

,, திருவள்ளுவர் பெரியார் - சேலம்

# என்னுரை.



ஆயிரம் பிறைகள் கண்ட அறிவுலக மேதை தந்தை பெரியார் அவர்களின் சீரிய தொண்டினை விளக்கும் இப் பாமாலை மலரை வெளியிடுவதில் பெருமையடைகிறேன்.

அறியாமை இருள் மண்டிக் கிடந்த இங்நாட்டில் அறிவுப் பகலவனாய் வந்து விழிதிறந்து - வாழ்வித்த வள்ளல் எந்தை பெரியாரைப்பற்றி புகழுதற்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை. இளங் கவிஞர்கள் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகள்-தந்தையை வாழ்த்துகின்றன. தந்தைமேலுள்ள பற்றினை தெளிவுபடுத்துகின்றன.

சென்ற ஆண்டே வெளிவரவேண்டிய இத்தொகுப்பு மலர் பல் இடர்பாடுகளால் தடைபட்டு இப்பொழுது மலர்கின்றது. தொகுப்பில் சில-பல அச்சுப்பிழைகள் புறங் கண்டுவிட்டன. குறைகளைச் சேர்த்தே எம்மைவிரும்பும் அன்பு நெஞ்சங்கள் எங்கெங்குமுண்டு. வெளியிடுகிறோம்.

இந்த முயற்சியைப் பாராட்டி வாழ்த்துரை நல்கிய அறிஞர்கள் திருமிகு **தி. வை. சொக்கப்பா** மற்றும் **திருவாரூர் கே. தங்கராசு** அவர்களுக்கு என் பணிவான நன்றி.

இக் கவிதை மலருக்கு அழகியதோர் முகப்பு ஓவியத்தை வரைந்துதவிய ஓவியர் **பே செல்லையா** அவர்கட்கும் அவ்வப்போது ஊக்கமூட்டிய கவிஞர் **மணிவேலன் - தமிழப்பன்** ஆகியோருக்கும் நெஞ்சு நிறை நன்றி உரித்தாகும்.

அடுத்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளினின்றும் பங்கேற்ற கவிஞர் பெருமக்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த **பி. என் தேவேந்திரன்** அவர்கட்கும் நன்றி உரித்தாகும்.

தமிழ் பெருமக்கள் இம் முயற்சியினைப் பாராட்டி வரவேற்பார்கள் என்ற எண்ணத்தோடு வெளியிடு கின்றேன். வணக்கம்.

"அன்பகம்"
14—1—67

அன்பன்.
**இரா. கண்ணிமை**



இரா. கண்ணிமை
மூக்கனூர்ப்பட்டி. (தகடூர் மாவட்டம்)

1. தந்தையே தமிழே எங்கள்
தமிழர்தம் தலைவா வேந்தே!
எந்தையே எழிலே என்றும்
மெய்ப்பொருள் காணும் வள்ளால்!

விந்தையாய் வந்தே எங்கள்
விழிகளைத் திறந்தே வைத்தாய்!
மந்தையாய் உமைஎ திர்த்த
மாக்களோ மாய்ந்து போனர்!

2. தத்துவ மேதை யாகி
தரணிவாழ் மக்கள் வாழ
புத்தனின் மொழிக்கு மேலே
புதியதோர் அறிவை ஈந்தாய்!

எத்திசை புகழ்ம ணக்கும்
ஏந்தலே உன்றன் தொண்டு
இத்தரை உள்ள மட்டும்
இலங்கிடும் ஒளியாய் நிற்தம்!

3. தமிழர்க்கு நல்ல காலம்
வந்திடும் பொன்னா ளென்று
இமியேனும் தன்ன லமில்
இந்நாட்டின் வளர்ச்சி கண்டாய்!

அமிழ்தமாம் உந்தன் தொண்டால்
அறியாமை அழிந்த தென்றே
இமிழ்கடல் உலகம் எல்லாம்
எந்தையே உம்மை வாழ்த்தும்!

4. சாதியின் புன்மை தன்னைச்
சாடினாய்! ஓட வைத்தாய்
வேதியன் விளக்கி வைத்த
வேண்டாத நூல் அழித்தாய்!

சாதித்தாய்! இந்த நாட்டின்
சமதர்மப் பாதை காண
போதித்தாய் மக்க ளுக்கே
புத்துலக சிற்பி யானாய்!

5. தன்னிரை அறிந்தவன் போல்
தமிழக நாட்டின் காலே
மின்னிடும் பொன்மே கம்போல்
மங்கிடா புகழை எய்தும்!

பொன்னிவள நாடு பெற்ற
பண்புசால் அய்யா உந்தன்
பொன்தாடி அசைவு தன்ஞல்
புதியதோர் உலகம் கண்டோம்!

6. உயிரினில் உயிராய் நின்றே
உள்ளத்தில் வாழு கின்ருய்
பயிரினைக் காக்கும் நல்ல
மழையினைப் போலே வந்தாய்!

சுயவுணர் வில்லா மாந்தர்
துயரினைக் களைந்தாய்; என்றும்
அயர்விலா பணியே ஆற்ற
ஆர்வமே கொள்ளு கின்ருய்!




7. ஏந்திடும் இதயம் தன்னில்
இலங்கிடும் அறிவுப் பேழை
மாந்திடும் எங்க ளுக்கே
மலையாக அள்ள வைத்தாய்!

பூந்துகில் போர்த்து கின்றோம்
புகழ்மாலை சூட்டு கின்றோம்
வேந்தேஉன் எடைக்கு ஈடாய்
வைரங்கள் கொட்டு கின்றோம்!

8. வளையாத மலையைப் போன்ற
உள்ளத்தை கொண்டாய்; தங்கம்
விளைகின்ற நிலத்தைப் போன்று
விளங்கிடும் கருத்தைக் கொண்டாய்!

களைபோக்க வந்தாய்! இந்த
தண்டமிழ் நிலத்தில் என்றும்!
தளைபோக்க வந்தாய்! எங்கள்
தாங்கிடும் இதயம் நின்றாய்

9. அலைபாயும் கடல்க ளுக்கும்
அணிசெயும் தொழிலா ளர்க்கும்
சிலைசெயும் சிற்பி கட்கும்
செக்கிழு மாடு கட்கும்

உலகதனில் உருகு வோர்க்கும்
ஓய்வுண்டே! ஓயா வண்ணம்
நிலையான தொண்டே செய்யும்
நாயக வாழ்த்து கின்றோம்!

10 ஆயிரம் பிறைகள் கண்டாய்
அறிவுலக மேதை யானாய்
பாயிரம் பாடு கின்றோம்
பெரியாரே! எங்கள் உள்ளக்

கோயிலில் இறையாய் நின்றே
கண்மூடி வழக்கம் மாய்த்தாய்!
ஆயிரம் ஆண்டு வாழ்ந்து
அருந்தமிழ் நாட்டைக் காப்பாய்!



11 எண்பத்து ஏழே கண்டும்
இணைக்காத சிங்க மானாய்
பண்பொத்துத் தமிழர் வாழ
பாதையே வகுத்த எங்கள்

கண்ணொத்த தலைவா! நாங்கள்
வாழ்கிறோம் உன்றன் நாளில்
பண்ணொத்த பாடல் பாடி
பல்லாண்டு வாழ்த்து கின்றோம்!

12 நந்தமிழ் மக்கள் நாடு
நற்றமிழ் எங்கும் ஓங்க
வந்தநல் தலைவா உந்தன்
வயதுநூ றாண்டின் மேலாய்

வந்திடும் என்போம்! மக்கள்
வாழ்த்தினார் வாழி! வாழி!
சிந்தனைச் சிற்பி எங்கள்
செம்மலே வாழி! வாழி!

## அறிவுலக  மேதை!

கலி. பூங்குன்றன். 20, திருவாரூர் சாலை, மாயுரம்.

1. முயற்சிக்கு முன்பிறந்த முத்தே
முகிலுக்கு மேலளந்த மதியே
உயர்ச்சிக்கு வானளந்த உலகே
ஊழுக்கு கைகலந்த பகையே!

புயலுக்கு புயமளந்த போத்தே
புகழுக்குப் புவியளந்த பொழுதே
முயலுக்கு முன்றேகா லானல்
முடித்திடுவேன் நின்புகழும் பாடி!

2. என்வணக்கம் நீயேற்பாய் தலைவா!
எழுந்திருந்தேன் உன்குரலால் மறவேன்
என்வணக்கம் நீயேற்பாய் எந்தை!
எழுச்சியுற்றேன் உன்முரசால் மறவேன்

என்வணக்கம் நீயேற்பாய் அன்னய்!
இனங்கண்டேன் உன்முகத்தால் மறவேன்
என்வணக்கம் நீயேற்பாய் சேயே!
இருந்திடுக என்றென்றும் தாயே!

(வேறு)

3. அறியாமை மொய்த்தவிடம் அனலைக் கொட்டி
அறியாமை அறியாமை ஆக்க வந்தாய்
எரியாத நீர்ப்பரப்பாய் கிடந்த நாட்டில்
எழுதீயால் உணர்ச்சித்தீ மூட்டி வைத்தாய்!
குறியாகத் தமிழர்தம் உரிமை காத்து
குவலயத்தில் அவன்குரலைப் பேச வைத்தாய்
மடிந்தாலும் உனைமறவோம் மன்னா! உந்தன்
மடிமீதில் சாய்ந்திருப்போம் மன்னி வாழ்க!

4. புரியாதார் உனைவெறுப்பார் பொறுத்துக்
கொள்வாய்
புரிந்துவிட்டால் புதையலென்பார் சிரித்துக்
கொள்வாய்
எரியாத நெருப்பென்பார் ஏற்றுக் கொள்வாய்
ஏந்தலென்று பின்சொல்வார் ஏந்திக்
கொள்வாய்!
இனிப்பிக்கும் இகழ்ச்சிக்கும் அர்த்தம் ஒன்றே
அய்யாநின் வரலாற்றில் அறிந்து
கொண்டோம்
புளிப்பிருக்கும் நின்சொல்லைப் பிளந்து பார்ப்பின்
பொன்னிருக்கும் பொருளிருக்கும் புரிந்து
கொண்டோம்!



5. புரியாத குழப்பங்கள் சூழ்ந்த போதோ
பளிங்கான குரல்தூக்கி பாதை செய்வாய்!
தெரியாத திசைநோக்கிச் செல்லும் போதோ
தெளிவான சொல்காட்டி தேயம் காப்பாய்!

அறியாத அனுபவமே மிரட்டும் போதும்
அட்டியின்றி முன்னின்றே அழைத்துச் செல்வாய்!
புரியாத பணியில்லை அய்யா உம்மைப்
புரியாதார் இனியில்லை உண்மை உண்மை!

6. அரிமாவும் பெரும்படையாய் வந்த போதும்
அஞ்சாது உன்நெஞ்சம் ஆட்சி வைக்கும்!
விரிநாகம் விரைந்தங்கே வந்த போதும்
ஒதுங்காது உன்கரங்கள் ஒடித் தாக்கும்

ஆரியமே படைகட்டி வந்த போதும்
அயராது உன்தோள்கள் விம்பித் தள்ளும்
பாரினிலே புதுவியக்கம் படைத்தாய் நீயே
புகழெல்லாம் இனியுனக்கே சொந்தம்சொந்தம்!

7. அரசியல்தான் வாழ்வென்று அய்யா நீவீர்
அசைந்திருந்தால் இசைந்திருக் பதவி எல்லாம்
அரசாங்கப் புரவிவண்டி உம்மைத் தேடி
அழைத்திடவே காத்திருக்கும் காலம் எல்லாம்!

அரசேநீ மறுத்துவிட்டாய்! அசைந்தா யில்லை!
ஆனாலும் நீயசைத்தால் அரசே ஆடும்
கரத்தினிலே நீவைத்த வித்தைக் கூத்தும்
காலந்தான் அழிந்தாலும் கதையாய் வாழும்

8. நன்றியில்லை மக்கட்கு என்ற போதும்
நில்லாது நின்கால்கள் தொடர்ந்தே போகும்!
“பன்றியிலே இல்லாத சாதி யிங்கே
பந்தியிலே வந்ததென்ன மூட மக்காள்”

“கன்றினிலே காணாத தீட்டு யாவும்
காட்சியிலே வந்ததென்ன காட்டு முட்டாள்”
என்றகுரல் ஓயாமல் படையாய்த் தாக்கும்
எளியவரின் நெஞ்சமெல்லாம் பாலை
வார்க்கும் !





9. உலகத்தின் மேதைகளாம் மலருக்குள்ளே
        உயிர்மணமாய் நீவீசி திகழ்வாய் உண்மை!
பலகற்று பட்டத்தால் மேதை யானோர்
        படிகட்டி உன்னறிவு வாசல் நிற்பார்!

புலனாகா எண்ணங்கள் தூக்கி வந்து
        பூமான்நின் சந்நிதியில் போட்டு டைத்தால்
கலகலக்கும்; கட்டவிழும்; கதையா என்ன?
        காலமகள் காதலர்தான் நீயோ மன்ன!

10. விரியாத மலரில்லை உன்னைக் கண்டால்
        விடியாத இருளில்லை வேந்தே உம்மால்!
பிரியாத சிக்கில்லை மறந்தே போகும்
        படியாத ஆளில்லை பார்த்த போதே

சரியாத சழக்கில்லை சாய்ந்தே போகும்!
        சரித்திரத்தின் அசைவெல்லாம் உன்னைப்
                பேசும்
பெரியாராய்த் தான்பிறந்தாய் பிறக்கும் போதே
        பேதைமக்கள் வாழ்ந்திடவே வாழ்க மாதே!

அறிவுலக  மேதை!

தமிழப்பன். அரூர். (தகடூர் மாவட்டம்)

1. பாரெங்கும் அறியாமை இருளில் மூழ்கி
பகுத்தறிவை மறந்திருந்த நேரந் தன்னில்
ஈரோட்டுச் தங்கச் சுரங்கத் துள்ளே
இருந்துவெளித் தோன்றிநின்ற கதிரோன்
போலே!

பாரோரெல் லாம்புகழும் தமிழர் வாழ்வில்
பளிச்சென்று தான்மான உணர்வு தன்னை
சீரோங்கச் செப்பியவர் செம்மை காண
சிந்தனைக்கே சிற்பியென வாழும் கோவே!

2. சாதியெனும் இழிமங்கை தன்னைப்பற்றி
சங்கிலியால் கற்றூணில் பிணித்து
வைத்தாய்!
நீதியிற்ற சமயவெறி கொண்டோர் தம்மால்
நீலியவள் தமிழகத்தில் கட்ட விழத்து

ஆதிக்கம் செலுத்துகின்றாள் மீண்டும் வந்து
ஐய்யய்யோ இதுவென்ன அநீதி யைய்யா!
மேதினியில் ஆற்றிவைத்த புண்ணைக் கீறி
மீண்டுமதை புண்ணாக்க விருப்பு வாரோ?

3. அறியாமை இருளினிலே உலகம் உள்ள
அல்லலினை அறிவிக்க சறுப்புச் சட்டை
தரித்திருக்கும் பெரியாரே! தமிழ் கத்து
சாக்கரடீ சென்றழைக்கும் தகுதி மிக்கோய்!

குறித்தவுன் அறிவுலகில் உலகம் சென்று
குள்ளபுத்தி மாறுகின்ற காலம் மட்டும்
முறியாத செம்பவள உந்தன் மேனி
மூடியுள்ள அடையாள சட்டை தானோ?

4. புத்திக்கும் எட்டாத புராணப் புற்றில்
புகுந்திருக்கும் நச்சுப்பல் பாம்பின் கூட்டம்
செத்தொழிய உன்வாயின் சொல்போ தாதோ
சேவையொன்றே தொழிலான உந்தன்கையில்

வைத்திருக்கும் தடியெதற்கோ? புற்றி னுள்ளே
வாராது மறைந்திருக்கும் மடமைப் பாம்பை;
குத்திவெளிக் கொணர்ந்தவற்றை சாடு தற்கோ
கொண்டிருக்கும் உன்கையின் கோல்தா
னையா!



5. பொய்யான சாத்திரங்கள் கடவுள் எல்லாம்
புகன்றுலகில் உயிர்வாழும் திருடர் கூட்டம்
ஐயாவே உன்கணைப்பை கேட்ட போதே
அலறிக்கொண் டோடிடுவர்! நடுங்கங்
கொள்வர்!

உய்யவழி காணாது மறைவாய் செய்யும்
உலுத்தர்களின் செயல்தம்மை மோப்பம் காண
செய்வதற்கோ சிறப்போடு அருகில் வைத்து
செல்லமாய் நீவளர்க்கும் நாய்தா னையா!

6. ஊராட்சி செய்கின்ற ஒருவ ரேனும்
ஒன்றியத்துப் பெருந்தலைவ ரேயானாலும்
பாராளு மன்றத் துறவோனா னாலும்
பைந்தமிழ்ச்சேர் நாட்ட மைச்சரே யானாலும்

யாரா யிருந்தாலும் சாதிப் பேரால்
இழிவுசெய்தால் இடித்துரைக்கும் உம்போல்
வாரை
ஈராயிர மாண்டு சென்ற போதும்
இனியொருவர் காண்பதுவே அரிதா மையா!



7. குப்பையாம் புராணத்தின் தோட்டி யானாய்
கொண்டவற்றை கொளுத்திடும் செந்தீயு
மானாய்!
செப்பரும்பல் தெய்வவுரு வங்கள் தம்மை
சின்னாபின் னமாயுடைக்கும் வேட்டு மானாய்!

ஒப்பரிய ஓர்தெய்வம் உண்மை யென்றே
ஊருலக மறியவழி காட்டி நின்றாய்!
செப்பம்சேர் அறிவுலக மேதை யென்றே
செகமெங்கும் சொல்லிடுமோர் தந்தை
யானாய்!

8. பொய்ப்புளுகு புராணமெனும் மடமைச் சேர்ந்த
புத்திக்கே எட்டாத குப்பை தன்னை
மெய்யறிவி னாலுணர்ந்து துறந்து நின்றாய்
மீண்டுமவை சிறகுகொண்டு பறக்கு தையா

வையத்தில் அவைவாழ வரவேற் கின்ற
வன்நெஞ்சர் கூண்டோடு அழிந்து போக
நெய்பெய்த செந்தீயில் அவர்கள் மாள
நீவாழ வேண்டுமையா நெடுநா ளிங்கு!



# அறிவுலக மேதை!

வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.
செங்கை மாவட்டம்.

1. தலைவரெனப் பலருள்ளார் தமிழ கத்தில்
தலைவருக்கும் தலைவரெனத் தகுந்தோர்
யாராம்?
தலைவருக்கும் மேலான 'தந்தை' யாகித்
தன்மானச் சுடர்வீசும் பெரியார் அன்றோ!

தலைமுறைக்கும் வழிவகுத்தார்; தலைபோ னாலும்,
தன்மானம் காத்திடவே வேண்டும் என்றார்!
தலைகுனிந்த தமிழினத்தைத் தட்டி விட்டார்;
தன்மானத் தமிழரென நிமிர்ந்து நின்றோம்!

2. ஆதியிலே இல்லாத சாதி பேதம்,
ஆயிரமாய் வளர்ந்ததனால் அல்லற் பட்டோம்!
பாதியிலே வந்துற்ற சாதி தன்னை,
பகுத்தறிவின் துணிவாலே பதற வைத்தார்!

வீதியிலே திரிகின்ற நாயே போல
விளங்கிட்ட சாதியுமே ஆன தந்தோ!
சாதிக்குச் சாவுமணி அடித்த தோடு,
சமதர்மம் கண்டிடவும் சரிசெய் தாரே!



3. பார்ப்பானை ஐயரெனப் பகர லாமோ?
பார்ப்பானே கீழ்நோக்கி நம்மை யெல்லாம்!
பார்ப்பானை யாரென்று காட்டு கின்றார்;
பண்பான குறள்தந்த வள்ளுவர்தாம்!

சீர்கொண்ட அறஞ்செய்யும் அனைவர் தாமும்,
சீரியதோர் அந்தணரே என்று சொன்னார்!
யார்கொண்டார் அக்கொள்கை? பெரியார்
அன்றோ?
யாவர்க்கும் எடுத்துரைத்துப் புரிய வைத்தார்!

4. ஆணுக்கும் பெண்ணுக்கும் காத லென்றால்,
அங்கேயும் சாதிப்பேய் ஆட்சி செய்யும்!
வீணுக்கு வாழ்வுதனை வெறுத்துக் கொள்ளும்
விபரீத நிலைதன்னை விரட்டச் செய்தார்!

"ஆணுக்கும் பெண்ணுக்கும் அன்றோ காதல்;
அடையாளம் இல்லாத சாதிக் கல்ல!
காணுங்கள்!" என்றுநமைக் காணச் சொல்லி,
காதலுக்கு வாழ்வளித்தார்; கடமை செய்தார்!

5. துணிவுள்ள பெரியார்ஓர் சாக்ர டீசு
துச்சமென எச்செயலும் தோன்றச்
செய்வார்!
பணியொன்றே அவர்வாழ்வின் கொள்கை யாகும்;
பட்டத்தை விரும்பாத பண்பின் குன்று!

அணியணியாய் அவர்கொள்கை ஏற்கச்
செல்வோம்;
அறிவுலக மேதையவர் முழங்கு கின்ற
மணியோசை கேட்கட்டும்! மனிதர் நம்மை,
மனிதரென உணர்த்திட்ட 'மேதை' வாழ்க!




அரங்க. இராசாராமன், வளவனூர்.
தெ. ஆ. மாவட்டம்.

1. அறிவுலகம் பலவிதமாம்; அறிவியல்முன்
னேற்றம்
ஆர்வமுடன் இலக்கியங்கள் கற்றுணரும்
மேன்மை
செறிவுறவே இவைபோல அறிவுலகம் பலவாம்
செயலிழந்து திறம்மறந்து வாழ்ந்திருந்த கூட்டம்

அறிவுணரத் தூண்டியதும் ஓரறிவாம் அந்த
அறிவுலகம் ஒருவிதமாம்; முதலுலகாம் என்ருல்
அறிவுலக மேதையெனும் பெரியார்க்கே
வாய்க்கும்?
அடலேறும் தமிழ்த்தந்தை பெரியார்க்கே
வாய்க்கும் !

2. ஆறாக ஓரறிவை மனிதன்தான் கொண்டான்
ஆனாலும் பகுத்துணரா அறிவிலியாய் நின்றான்
மாறாது மடமைக்கு மாத்தமிழன் முன்னர்
மண்டியிட்ட காரணமே பகுத்தறியா எண்ணம்;
ஆறாக சிந்தனைகள். பகுத்தறிவுக் கொள்கை
ஆம்இவைதாம் பெரியாராம்; இனமெழவே
அன்னார்
கூறாத கருத்தில்லை; அறிவிருந்தும் எண்ணாக்
குருடர்க்குக் கண்ணானார் அறிவுலக மேதை!

3. ஓராயி ரம்தெய்வம் என்றுபல காட்டி
ஒழுக்கத்தை விட்டுழன்று மடமைதனைக் கூட்டி
தேராதா னாயிருந்தான் செந்தமிழன் அன்று
தெளிவடைந்தான் ஓரளவு பகுத்தறிவால் இன்று;
''வேராழம் மடமைக்கோ? வெட்டிடுவோம்!''என்றே
வினைமுடிக்கப் பகுத்தறிவுக் கோடரியும் தந்தார்
ஈரோடு நமக்களித்த அறிவுலக மேதை!
இனியவரால் நாமறிவோம் புதியதொரு பாதை!

(வேறு)

4. சிந்தை மணக்கவரும்
நந்தம் தமிழ்தழைக்க
வந்தச் சிறந்தபெரி யாரெவர்? - தமிழ்த்
தந்தை எனப்பலரும்
அந்தம் மிகப்புகழச்
சிந்தை சிறந்தபெரி யாரவர் !

5. கெஞ்சிப் பழக்கமில்லை
அஞ்சிப் பழக்கமில்லை
நெஞ்சில் நினைத்தவுடன் தீஅவர் ! - தனைத்
தஞ்சம் என்பதவி
கொஞ்சிக் குலவவர
நஞ்சாம் எனவெறுத்தத் தூயவர் !

6. ''சங்கம் வளர்த்தமிழ்
எங்கள் உயிர்க்குநிகர்''
எங்கும் ஒலிக்குமிவை யார்குரல்? - குலம்
எங்கும் பிளவுதரப்
பொங்கிப் புகுந்ததனை
மங்கப் படைத்தபெரி யார்குரல்!

(வேறு)

7. வெண்மை நிறத்தாடி! வீரக் கருஞ்சட்டை!
நன்மை தமிழர்க்கு நாடுவோரைக் கொண்டாடும்
நன்னெஞ்சம் கொண்டிருப்பார் நாட்டிலுள்ள
மற்றெல்லாம்
'வெங்காயம்' என்பார் வெறுத்து!

அறிவுலக  மேதை !

**கருவை. இராவண ஒன்னான்.** கரூர். (திருச்சி மாவட்டம்)

1. "பகுத்துணரும் உணர்விலா பரத நாட்டில்
பார்த்திட்டால் பாவ" மென்று சொல்ல, மாக்கள்
உகுத்தபடி உரிமையுடன் செல்ல, அங்கே
உரிமையுள்ள மனிதனுக்கு உரிமை இல்லை
தொகுத்தாற்போல் ஓரினத்தார் உயர்வு காண
தொன்றுதொட்ட தமிழ்மக்கள் தொல்லை கொள்ள
தகுதிதரும் பகுத்தறிவை தமிழர் ஏற்க
தப்பியதால் வந்தவிளை வென்ன வென்றால்,

2. அறிவுதனை அழித்துத்தன் இனத்தார் வாழ
அருங்கடவுள் என்றிட்டான் பார்ப்பான் கல்லை;
கறிகள்ளும் கற்சிலைக்கு காட்டி, தின்று
கண்டிடுவான் கற்சிலையால் செல்வம்" என்றே

அறிவுலக மேதைதந்தை பெரியார் நாட்டில்
அறிவுறுத்தி பகுத்தறிவை பரப்பா விட்டால்
சிறிதளவும் உணர்ச்சியற்ற சிலையைப் போல
செந்தமிழர் வாழ்ந்திருப்பார்; உண்மை; மேலும்

3. நீதிநேர்மை நிலைத்திருக்க நியாயமில்லை;
நீங்காமல் நின்றிருக்கும் நீசர் தொல்லை
சாதிமதம் சாயாமல் நிமிர்ந்து வாழும்
சமத்துவமோ சாக்காட்டில் அயர்ந்து வீழும்

தேதிதன்னை மாற்றிவிட்ட ஒருவர் இன்னும்
திகழ்வார்நீ திபதியென; ஓல மிட்டு
வீதிக்கு ஆச்சாரி வரவே மாட்டார்;
வீழ்ந்திருந்த நம்மவரும் எழவே மாட்டார்

4. தீங்கற்ற காங்கிரசோ ஏங்கு கின்ற
தீயரிடம் ஆட்சிவிட் டு நில்லா தோடும்
பாங்காக பள்ளிகளில் பறையர் பள்ளர்
பார்ப்பனர்தம் பக்கத்தில் அமர்தல் எங்கே?

ஓங்கார ஆரியரும் ஒடுங்கி ஓய்ந்து
ஒப்பாரி வைக்கின்ற நிலைகொள் வாரோ?
ஆங்காங்கு இலவசஊன் உடைநற் கல்வி
அடைவாரோ நம்மவர்தான் அறிந்தே
சொல்வீர்!





5. பறந்துவந்த பக்திகதை பகவத் கீதை
பரந்திங்கு விரிந்திருக்கும் பார்க்கும் திக்கில்
மறந்திட்ட திருக்குறளும் மறைந்தே போகும்
மடமையதில் ஆடுகோழி பலியால் சாகும்
சிறந்தவராம் காமராசர் சிறக்க மாட்டார்
சிதறுண்ட தமிழரினம் சிதைந்தே போகும்
சிறப்பான உத்தியோகம் தமிழர் பெற்று
சீரான வாழ்வுகாண முடியா தன்றோ?

6. தோளோடு தோள்நின்ற மக்கள் முன்னே
தொடர்கின்றார் தள்ளாத வயதில்
தொண்டை
வாளோடு வாள்உராயும் வண்ண மாகும்
வகுத்திட்ட கருத்துக்கள் வரிசை
கொண்டால்

கோளோடு கோள்மோதும் நிலையு மாகும்
கொட்டிட்ட வாதத்தை கூறும் போது;
ஆளோடு ஆளாக அறிவின் மேதை
அவனியுள்ள வரைக்குமவர் வாழி! வாழி!





தி. குலோத்துங்கன், கரந்தை, தஞ்சை மாவட்டம்.

1. சிந்திக்கும் ஆற்றலின்றி சொத்தை யான
செந்தமிழர் நாட்டுக்கோர் தூண்டு கோலாய்
வந்தபெரும் வெந்தாடி வேந்தர் ஏறே!
வற்ருத அறிவின்நல் வளமே! உன்னை
அந்திமலர் சோலையிலே அரும்பு கின்ற
அழகுமுல்லைப் போலமணம் அள்ளி வீசும்
பைந்தமிழால் பாடுகின்றேன் பரந்துப் பட்டப்
பேரறிவால் பிழைகாணின் பொருத்துக்
கொள்வீர்!

2. கூழிற்கும் கட்டுகின்ற துணித னக்கும்
கடைந்தெடுத்த தமிழ்ச்சொல்லால் கவிதை யாத்துப்
பாழான காப்பியத்தைப் பாடி வைத்தப்
பாவலர்கள் யாவருமே பகுத்துக் காணும்
ஆழமான அறிவுதனை விளக்க வில்லை
அடுக்கடுக்காய் குப்பைகளை சேர்த்து வைத்தார்
தாழ்வான அவர்வழியை தகர்த்து நீயும்
தமிழர்க்குக் கண்கொடுத்தாய் அறிவின் மேதாய்




3. சீராகப் பார்ப்பார்கள் செல்லா தென்றும்
சுயநலத்தைப் பேணியே சாதி செய்தார்.
ஊராளும் மன்னர்கள் எல்லாம் கூட
உண்மைக்கு செங்கோலை ஓச்ச வில்லை

பார்ப்பாத்தி அழகிற்கே பணயம் வைத்தார்
பொய்யான இவ்வழியைப் போக்க நாளும்
கூரான கத்திக்கும் அஞ்சா மல்நீ
கொள்கைகளை சொல்லிவென்றாய்
அறிவின் மேலோய்!

4. சிறுகல்லை சாணத்தைத் தெய்வ மாக்கி
செல்லரித்த புராணத்தை சொல்லிச் சொல்லி
கறக்கின்ற பால்போல சுரக்கும் நல்ல
கருத்துக்குத் தடைபோட்டக் கயவர்
நாட்டை

திறமான சிந்தையினால் திருத்தி விட்ட
தழைக்கின்ற தமிழகத்தின் தந்தாய்!
தென்னர்
மறக்காமல் போற்றுகின்ற தமிழே! உன்போல்
மாநிலத்தில் யாருலல்லை அறிவின் மேலோய்!





5. பழமொத்த மனையாளைப் பிரிந்த ஆண்கள்
பன்நூறு பெண்டிர்களின் நட்டைப் பெற்று
குழலொத்தத் தமிழ்ப்பேசிக் கொஞ்சிக் கொஞ்சி
குடும்பத்தை நடத்திடலாம் கற்போ இல்லை

எழில்முல்லை போன்றபெண்ணோ கணவன் தன்னை
இழந்துவிட்டால் மூளியாக இருத்தல் வேண்டும்
வழிவழியாய் வந்தஇதை அழித்த வீர!
அறிவுலக மேதாய்!நீ வாழ்க! வாழ்க!







மே. மு. அ. திருவள்ளுவர் பெரியார்
*சர்க்கார் நாட்டாமங்கலம், சேலம்-3.*

1. அண்ணல் ஈ. வே. ரா; பத்து
 ஆண்டுகள் படித்தா ரில்லை
துன்பினை ஏற்றே நாளும்
 துடுக்கினை செய்தே வந்தார்!

பன்னிடும் பூசை தன்னில்
 பலப்பல பொய்மை கண்டே
தன்மான உணர்வு கொண்டு
 தருக்கவா தங்கள் செய்தார்!

2. இத்தகை அறிவால் தந்தை
 ஈடிலா வளர்ச்சி யாகி
சத்திலா புராணக் குப்பை
 சரியிலை என்றார்; நாளும்!

புத்தரின் கொள்கை தன்னில்
 புதியமா றுதல்கள் செய்த
பத்தரை மாற்றுத் தங்கம்
 பகலவன் பெரியார் வாழ்க!

3. பற்பல தாழ்ந்தோர் வீழ
பதவிகள் உயர்ந்தோ ருக்கே
அற்பணம் என்ற பார்ப்பின்
அறிவிலி தன்னை மாய்த்தார்!

நிற்பதே இன்றி நாளும்
நெடும்பல புரட்சி செய்த
விற்பனர் நமது தந்தை
வீரராம் பெரியார் வாழ்க!

4. வள்ளுவர் ஈ. வே. ரா. சொல்
வடலூரார், புத்தர் சொல்லும்
அள்ளிடும் அமுத வெள்ளம்
அறியாமை போக்கும் தீபம்!

எல்லையாம் குமரி வங்கம்
இமயத்தின் குன்றந் தோறும்
நல்லதோர் புதுமை செய்த
அறிவுலக மேதை வாழ்க!

## "பகுத்தறிவன்"

ஈரோ டென்னும் எழில்நிறை ஊரில்
சீரோ டுயர்ந்த செல்வக் குழலில்
எட்டுப் பத்தொடு ஏழாண்டு முன்னே
கட்டிப் பொன்னாய் கனியிடைக் காடாய்
பிறந்தவன்! தமிழரின் பிறவி நலத்தினில்
சிறந்திட பல்துறைச் செயலில் முனைந்தவன்!
ஆரியக் கூட்ட அடிகளைப் பணிந்து
சீரை யிழந்து சிறப்பினில் தாழ்ந்து
போர்ப்பறை முழக்கிப் புலியான் டிருந்த
ஆர்த்தல் அடங்கி, அறிவில் குன்றி
நாய்போல் பிறரை நத்திப் பிழைத்து
வாயிலா ஊமை வாழ்விற் றிகழ்ந்து
பொய்யை ஆண்டவன் பொன்னுரை என்றும்
மெய்யை நாத்திகர் வேலுரை என்றும்
கல்லே உலகக் கடவுள் என்றும்
சொல்லால் செயலால் துதித்து. மானம்
துளியு மிலாமல் துவண்டு. நெஞ்சில்
களிப்பே யின்றிக் கண்ணீர் சிந்தி
இருந்த தமிழரின் இருளை யகற்ற
பொருத்தி அறிவொளி புகுத்திய மேதை!

# அறிவுலக  மேதை !

அறிவில் திறத்தில் அஞ்சா நெஞ்சில்
நெறியில் உழைப்பில் நிமிர்ந்த நோக்கில்
கூனை நிமிர்த்திக் குடையா ளென்று
வானைப் பிளக்க வாயுரை தந்து
தட்டி எழுப்பித் தலைநிமி ரென்று
கொட்டிப் போர்ப்பறை குரலைக் கொடுக்கும்
"பெரியார்" ஓர்முறை பிறந்தார்! இனிமேல்
பெரியார் ஒருவர் பிறந்திடு வாரோ?
தமிழன் இவரைத் தழுவிடல் வேண்டும்
உமிழும் இவருரை உண்ணுதல் வேண்டும்;
தழைத்திட "விடுதலை" தாவிடல் வேண்டும்;
கிடைப்ப தற்கரிய கிழவர் பெரியார்
கிடைத்தார்; அவர்சொல் கேட்கா விட்டால்
நாயினும் கீழென நலிவர் தமிழர்
தாயிலா சேயெனத் தவித்திடு வார்கள்;
புழுவாய் நெளிந்து புழுதியிற் புதைந்து
அழுகற் பழமென ஆவது உறுதி!
"பெரியார்" சாகாப் பெரியார்; அவரைப்
புரியார் உலகம் புரியா தாரே !!



ஒருமுறை வள்ளுவன் உதித்தான் பின்னே
இரண்டு ஆயிரம் இருட்டு ஆண்டுதான்
ஏசு என்பவன் என்றே பிறந்தான்
மாசுதான் கழிந்த மற்ற ஆண்டுகள்
மார்க்ஸ் மேதை மடிந்தான்; தொடர்ந்து
ஆர்பிறந் தானிங் கவன்போ லொருவன்?
நந்தன் எறிந்த நாள்முத லவன்போல்
இந்த நாள்வரை எவன்பிறந் திட்டான்?
நிறவெறி யொழித்த லிங்கன் நிகர்ப்ப
திறத்தில் மற்றவர் திளைத்திட விலையே!
தத்துவம் தந்த டார்வினை யொத்து
இத்தரை மீது எவன்வந் திட்டான்?
புரட்சிக் கொள்கை புகுத்திய ரூஸோ
உருளும் உலகில் ஒருமுறை தானே!
ஊருக் குழைத்த உத்தமன்; போற்றும்
தீரம் நிறைந்த செந்நாப் புலவர்
நாடு நலம்பெற நல்லதைச் சொன்னேன்
கேடு களைந்திட கிளர்ச்சிகள் புரிந்தோன்!
ஆயிரம் ஆண்டுக் கொருமுறை பிறப்பான்
மாயிருள் ஆண்டுதான் மற்றவை எல்லாம்!

**சஞ்சீவி - துரை.** மொரப்பூர். தகடூர் மாவட்டம்.

1. பிறபினுல் உயர்வு தாழ்வு
 பேசுதல் தீமை என்ற
திறம்பெறு குறள் கருத்தைத்
 தெருவெலாம், மேடை தோறும்

வரம்பிலா தெடுத்துக் கூறி
 வாய்ப்பந்தல் போட்டுத் தங்கள்
உரம்பெறு வாழ்விற் கொள்ளா
 உலத்தரைச் சாடும் சான்றேன்!

2. மாடாடு மேய்க்க வந்த
 மடையர்கள் இடைக்கா லத்தில்
ஊடாடித் தமிழர் வாழ்வின்
 உயர்வெலாம் கெடுத்து கையில்

ஏடுகள் எடுத்துத் தங்கள்
 ஏற்றமும் தமிழர்க் கேடும்
பாடிய மனுவின் நீதிப்
 பழியெலாம் எடுத்துச் சொன்ன

3. வெந்தாடி வேந்தர்; வைக்கம்
வீரர்;மாத் தமிழர் தங்கள்
பண்பாடி மேன்மை யெய்தப்
பாரெலாம் பகைத்த மேலோன்;

மண்கூடி எதிர்த்தும் இம்மி
மாறாத கொள்கை யாளன்;
எண்கூடிப் பன்னூ றாண்டு
இனிதுஎம் தலைவன் வாழி!

4. சாத்திரம் என்பான் பார்ப்பான்;
சாதிக்கு ஒவ்வொன் றென்பான்
கோத்திரம் என்பான்; பூணூல்
கொள்கையன் என்பான்; தன்னை;

வேதியன் என்பான்; நான்கு
வேதமே முதல தென்பான்;
சூத்திரன் என்பான் நம்மைச்
சுயமரி யாதை இல்லான்!





5. பார்ப்பனக் களையை நீக்கிப்
பைந்தமிழ்ப் பயிர் வளர்க்க
ஏற்பன எடுத்துக் கூறி
ஏற்றமும் தமிழர்க் காக்க

தூற்றலும் பழியும் தாங்கும்
தூயர் ஈ. வே. ரா. தோன்ற
நோற்பன நோற்றார் ஈங்கு
நோயுற்ற தமிழர் அம்மா!

6. மண்கண்ட தமிழர் மான
மரபுக்குச் சிறிது மேலா
குண்டர்கள் எனத் தகுந்த
குற்றங்கொள் ஒழுக்கங் கொண்ட

விண்கண்ட கடவு ளெல்லாம்
வீணென்று விளக்கந் தந்த
கண்கண்ட கடவுள்: அய்யா
காட்சியே மாட்சி யம்மா!

## அறிவுலக  மேதை !

**தேவ. சீனி. அருணன்.** *வடசேரி: நாகர்கோயில்.*

பாருக்குள் வளர்ந்த பார்ப்பணீயக் கொடுமையை
பாரோர் உணரவே பகுத்தறிவுத் துணையுடன்
தன்மானப் பாதையை தரணிக்கு காட்டிய
தனிப்பெரும் புத்தம் மற்றதின் பின்பு
வகுப்புரிமை மொழியுரிமை இனயுரிமை
நாட்டுரிமை
இதயச் சுடரிலே இயங்கும் இயக்கமாய்
பெரியாரிசக் கொள்கை ஒன்றுதான் உண்டென்று
உலகிற்கு உரைத்து உயர்ந்தார் பெரியாரே!
தேரோடும் வீதியில் தெருவோடு குடிபுகுந்து
தேரைஇழு யென்றுதேவ ஞய்நின் றுன்னை

தீப ஆராதனை தீட்(டு)அகற் றுமென
தீண்டாமை வளர்த்து தீயையும் உமிழ்ந்து
குடியைக் கெடுக்க குடும்பியையும் தட்டி
கடுஅரவ நூலதனை மார்பின் தாலியாய்
நாவிலே தேன்கலந்து நஞ்சிலே தோய்த்து
சூழ்ச்சியால் வாழும் சூதராம் சூரையரை
தாணியை அழிக்கும் தக்கா வர்க்கத்தை
அறவே அழிக்க அழியேறு பகலவன்;
விநயகன் கிருட்டினன் விக்கிர பொம்மைகளை
வீதியிலே கிடத்தி அழித்து நொறுக்கி;




வீடுதிக் கிழிவாய் சாதிப் பெயரிலே
சாற்றிய பலகையை சவடம் செய்து
மனுதர்ம மாயைமா நிலத்தில் உரைக்க
பார்ப்பானை பிராமணனாய் பகறாதே என்று;
வாதிட்டு வென்றாய்! வைக்கம் வீரரே!
ஆயிரம் தேள்விடம் அதனிலும் கொடுமை
சாதிகுல வேதம் சாத்திரம் கடவுளை
சாற்றும் கூட்டத்தை சதிசெய்து வேலைசெய்ய,
அதனையும் அறிந்து அகிலம் உணரவே!
சேரன் மாதேவி குருகுலக் குய்யத்தை
அன்றே அழித்து வென்றார் உலகத்தை!

ஓர்நெறி உணர்ந்து உலகுநெறி உய்ய;
வகுப்புரிமை செப்பி வளமடைய தமிழகம்
அய்ந்துபத்து லட்சம் அள்ளியே கொடுத்து,
பெரியார் கல்லூரி பெருமைபட எழுக!
அகிலத்து தலைவராய் ஆனார் அய்யாவே!
ஆரிய ஆசத்தில் அறிவற்ற இராசாசி
குல்லுக அரசியலில் குலதர்மம் செய்ய
கொதித்தே விரட்டி குணக்குன்று காமராசை,
இந்தியத் துணைகண்டம் இதயமாய்க் கொள்க
இயங்கிட்டார் பெரியார்'' அறிவலக
மேதையாய்!

## அறிவுலக  மேதை!

ஆ. இரா திருவெழிலன் - சென்னை.

1. அறியாமை இருள்மண்டிக் கிடந்த நாட்டில்
அறிவுத்தீ கொளுத்திவிட்டு விழிக்கச்
செய்தார்,
அறிவுலக மேதையெனப் பலரும் போற்றும்
அறத்தலைவர் நம்பெரியார்! நீடு வாழ்க!
செறிக்காத பகுத்தறிவு என்று சொல்லித்
தெருக்கோலம் போட்டுநின்ற காலம் மாறி
இறக்காத கொள்கையென எவரும் போற்றும்
இந்நிலையில் அவர்சொல்லைப் பற்றல் நன்மை!

2. 'பெண்புத்தி பின்புத்தி' என்றே சொல்லி
பேய்கட்கும் நாய்கட்கும் கீழாய்ச் செய்து
மண்மூடிப் போகவைத்த தமிழர் நாட்டு
மங்கையர்தம் மாண்பையெலாம் தோண்டித்
தோண்டி
விண்முட்டும் வரைமேலே யேற்றி யேற்றி
'வீண்புத்தி ஆண்புத்தி' என்றே சொன்ன
கண்மறைக்கும் உயர்துணிவு பரந்தே நிற்கும்
ககனத்தில் இவர்க்கன்றி யாருக் குண்டோ?





3. ஆதியிலே வந்தசாதிப் பயனென்பாரும்
அரியவிதிப் பலவுண்டென்(று) டேய்த்திட்
டோரும்
சோதியிலே கலந்தாரென்றுளறி னோரும்
சொல்லாமல் கொல்லாமல் மறைந்தே போக
சாதியிலே மதங்களிலே ஊறிப் போன
தமிழரினக் கற்பாறைக் குவியல் மேலே
மோதிவிட்டார் நம்பெரியார்! பாறை தூள்தூள்!
முரணிற்கு முரணாக எங்கும் காணோம்!

4. முப்பத்து முக்கோடித் தேவர் மாரும்
முக்கண்ணன் மைவண்ணன் தொடர்பி
னோரும்,
தெப்பத்து உற்சவமும் முனிவர் படையும்
தேய்த்துவிட்ட இந்நாட்டின் அறிவை
யெல்லாம்,
எப்பக்கம் பார்த்தாலும் ஒளிரும் வண்ணம்
இன்கல்வித் திறத்தாலே உயரச் செய்த
செப்பரிய பெரியாரின் தொண்டையெல்லாம்
செப்புதற்கோ தமிழர்நா போதா! போதா!



5. அறிவுலக மேதையென இவரைப் போற்றல்
'அரிசியுண்டு நெல்லுக்குள்ளே' எனல்போ
லாகும்,
செறிக்கின்ற திறனுண்டு பாலுக் கென்றே
செப்பிடுதல் போலாகும், எனவே நம்மை
மறிக்கின்ற சாதிமத பேதம் சாய்த்து,
மனமொத்து இனவாழ்வில் நாட்டம்
கொண்டு
அறிவுயர நாமுயரும் பெருமை எய்தி
அவர்வழியில் சென்றிடுவோம்!
வெற்றி கொள்வோம்!

---

**மணிவேலன்** - அரூர். (தருமபுரி மாவட்டம்)

1. வெள்ளைத்தாடி அசைவினிலே
வீரம் விளையும் கைத்தடியை
வீசிப் பேசும் பேச்சினிலே
மேலாம் கருத்துப் பலதெறிக்கும்!

எள்ளின் மூக்கு நுனியளவும்
யார்க்கும் அஞ்சாப் பார்வையிலே
இழிதொழில் புரியும் ஆரியரை
எரிக்கும் தீயின் பொறிபறக்கும்!





துள்ளும் சொல்லின் கருத்தினிலே
சோம்பர் வகுத்த மதக்கோட்டை
தூள்தூள் ஆக்கும் 'படை'யுண்டு!
துணிவின் ஆழ்ந்த நடையுண்டு!
உள்ளம் முழுதும் தமிழ்நாட்டை
உயர்த்தும் கருத்தின் இருப்பிடமாம்!
ஓயா துழைக்கும் பெரியீரே!
ஓங்கும் பலநாள் வாழ்வீரே!

2. நெற்றிச் சுருக்கம் ஒவ்வொன்றும்
நீண்ட சிந்தனை அடுக்காகும்!
நீண்ட சிந்தனை புராணமதை
நீறாய் ஆக்கும் கனல்துண்டாம்!
சுற்றும் கால்கள் பிணியிலும்
சோம்பிக் கிடக்கத் தயங்கிடுமே!
தோயும் உறக்கப் போதினிலும்
தூய மனத்தில் 'போராட்டம்'!
'கற்றுக் குட்டிப் பயல்களெலாம்'
காட்டும் 'பூச்சி' தனைக்கண்டு
கடந்த கால நடையினிலே
காலின் தூசு இவையென்றார்!
பற்றும் உள்ளம் தமிழாகும்!
பறக்கும் சொற்கள் அறிவாகும்!
பம்பும் உணர்ச்சி போராகும்!
பாங்குற எந்தை வாழியவே!





| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 9, 11, 11, 14 | உந்தன் | உன்றன் |
| 16 | பரிந்து | புரிந்து |
| 17 | ஆட்சி | ஆட்டி |
| 17 | தள்ளும் | துள்ளும் |
| 19 | உயிர்மணமாய் | உயர்மணமாய் |
| 27 | பெரியார்க்கே | பெயர்யார்க்கே |
| 40 | குழலில் | குடிலில் |

பாண்டியன் பிரஸ். சூரமங்கலம், சேலம்-5